மாண்புமிகு திரு. க. அன்பழகன் : வேடிக்கையாக மாணவர்கள் அப்படிச் சொல்லியிருக்கலாம். உண்மையில் சொல்லியிருக்க முடியாது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, இந்த ''செப்டம்பர்'' ரகம் ஆண்டுக்கு எத்தனை தடவை வருகிறது ? எந்தத் திங்களில் ஆரம்பிக்கப்பட்டு எப்போது முடிகிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த ''செப்டம்பர்'' 110 நாள் பயிர். பொதுவாக ஜனவரி, பிப்ரவரி–மாதங்களில் பயிரிடப்படுகிறது. நீலகிரி மலையில் இப்போது பயிராகிறது என்று கருதப்படுகிறது. இந்தப் புதிய முட்டைகோஸ் வேறெங்கும் பயிராகுமா என்பது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

குழந்தைகள் நல்வாழ்வு இல்லம், தஞ்சாவூர்.

* 352 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சமூகநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரிலுள்ள குழந்தைகள் நல்வாழ்வு இல்லத்திற்கு நவீன கட்டடம் கட்ட அரசு நிதி உதவி ஏதேனும் அளித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது ?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : (அ) தஞ்சையில் சமூக நலத்துறையின் மூலம் குழந்தைகள் நல்வாழ்வு இல்லம் ஏதும் நடக்கவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

School for Deaf and Dumb

*353 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state the number of Schools for Deaf and Dumb getting assistance from the Government in Kanyakumari district?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : ஒன்று.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, ஒன்று இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்பள்ளிக்கு அரசாங்கத்திடமிருந்து மானியம் கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை : தலைவரவர்களே, தற்போது அரசாங்கத்தின் மூலம்தான் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. 23,000 ரூபாய் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

திரு. சோ. அழகிரிசாமி : தலைவரவர்களே, தற்போது மானியத்திற்காக செலவழிக்கப்படும் தொகை எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை : தலைவரவர்களே, அதுபற்றி விளக்கமான, விரிவான குறிப்பு இல்லை என்றாலும் அங்கே பயிலுகிற மாணவர்கள் 147 பேர் இருக்கிறார்கள். பொதுவாக பள்ளி ஆசிரியர்களுக்கு மாத ஊதியமும், கடைநிலை ஊழியருக்கு மாத ஊதியமும், மாணவர்களுக்கு மாதம் 30 ரூபாயும் ஆக இப்படி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த வகையில் மொத்த மானியம் 23,600 ரூபாய்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க கேள்வி எண்கள் 678, 679, 680 ஒத்திவைக்கப்படுகின்றன.

வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) மாண்புமிகு பேரவைத் தலைவரின் 60-வது பிறந்தநாளையொட்டிய பாராட்டுரைகள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நம்முடைய பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் இன்றைய தினம் 60-வது வயதை அடையும் நாளாகும். இந்த நன்னாளில் அவருக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நன்னாளையொட்டி அவர்கள் நமக்கெல்லாம் திருக்குறள் தெளிவுரை என்னும் புத்தகத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதை அனைவரும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.